# அம்மா-மகள்-உறவு



முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

# அம்மா – மகள் – உறவுகள்

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

**திருவள்ளுவர் நிலையம்**

7, இராமன் தெரு, திருநகர்,

மதுரை - 625 006

# நூல் விளக்கம்


| | |
|---|---|
| நூற்பெயர் | அம்மா - மகள் - உறவு. |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார். |
| முதலாம்பதிப்பு | ஆனி - தி. பி. 2047 கி. பி. 2016 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| தாள் | 13. 7 வெள்ளைத் தாள். |
| அளவு | 1/8 |
| பக்கம் | iv + 24 = 28 |
| படிகள் | 1000 |
| விலை | உருவா 20/- |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23<br>0431 - 202421 |
| வெளியீடு | திருமதி. பாலாம்பாள் குமரசாமி<br>நினைவு அறக்கட்டளை<br>நெய்வேலி. |
| நிறுவுநர் | கு. தாமோதரன்<br>84385 13532 |

# படைப்பு

## அம்மா - மகள் - உறவு

அம்மா மகள் உறவு, வழி வழி உறவு!

வளர்முறை உறவு; வாழ்வியல் உறவு!

அம்மா இயற்கை ஆசிரியர்; மகள் வினவி வினவி

விளக்கம் பெறும் வியத்தகு அறிவுப் பெட்டகம்.

வருங்காலத் தலைமுறைக்கு அள்ளித் தர வாய்த்த வான்மழையாம் தேன்மழை!

அம்மா மகள் ஆகிய அமிழ்த உறவுகள்

உறவுமுறை பற்றிய உரையாடல்

**'சிறு சுவடி'**

இது!

உறவுநிலை, உலைந்து வரும் - உலைத்து வரும் -

தமிழுலகுக்கு

உரிமைப் படையல்!

கைப்படியை அச்சுப் படியாக ஆக்கித் தந்த கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றும் முனைவர் திருமகளார்க்கு இனிய வாழ்த்துக்கள். அச்சிட்ட அச்சுக் குழுமத்தார்க்கும், மெய்ப்புப் பார்த்த தமிழகனார்க்கும், வெளியீட்டுப் பொறுப்பேற்ற திருமதி. பாலம்மாள் - குமரசாமி நினைவு அறக்கட்டளை நிறுவுநர் கு. தாமோதரனார்க்கும் நலமார்ந்த நன்றியன்.

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

# அம்மா - மகள் - உறவு

அம்மா!

கண்ணே என்கிறீர்கள்!
கண்மணி என்கிறீர்கள்!

கண், நம் உறுப்புகளில் ஒன்று தானே!

காதே மூக்கே வாயே காலே என்பது இல்லையே ஏன்?

ஏன்? எல்லாவற்றுக்கும் ஆணையிடும் மூளையே என்று கூடச் சொல்வது இல்லையே!

என்னம்மா காரணம்?

எல்லாமும் வேண்டிய உறுப்புகள் தான். அவை பெரும்பாலும் நமக்கு உதவியாகவே இருப்பன. நம் இயக்கத்துக்கே காரணமானவை.

ஆனால், கண் அப்படி இல்லை.

பிறர்க்கு இரங்குகிறது; பரிவு காட்டுகிறது. வாய் சிரித்தாலும், நாவு வரவேற்றாலும், முகம் மலர்ந்தாலும் கைகால்கள் உதவினாலும் கண்ணின் பெருமையாம் **'கண்ணோட்டம்'** என்பதன் வழியே உண்டானவை தான். அதனால்தான் **'கண்ணே, கண்மணியே'** என்கிறோம்.

கண்ணோட்டமே பேரழகு, உயர்ந்த அணிகலன் என்றும், கண்ணோட்டம் இல்லாத கண், புண் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

**"கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்"**
என்பது அவர் வாய்மொழி!

❖❖❖❖

அம்மா,

"நிறைமதி இங்கே வாடா! போடா" என்கிறீர்கள்.

அம்மா உங்களுக்கு இலக்கணம் தெரியாதா?

ஏன்?

நிறைமதியாகிய நான் பெண்பாலா? ஆண்பாலா?

பெண்பால் தான்!

பிறகு ஏன் 'வாடா' என்கிறீர்கள்?

அண்ணனை 'வாடி' என்கிறீர்களா? என்றைக்காவது,

இல்லை!

அப்படியானால் ஆண்பால் என்பது உயர்ந்ததா?

அடே யப்பா!

இதையும் தான் பாருங்கள்! 'அடே யப்பா' என்று தானே சொல்கிறீர்கள்! 'அடியே அம்மா' என்னவில்லையே!

ஆசையால் பெண்பிள்ளையை அடா, வாடா, போடா என்பது வழக்கம்!

அந்த ஆசை பெண்பாலுக்கு இல்லையா?

பெண்களுக்கே பெண்பால் மீது ஆசையில்லை என்றால், ஆண்பால் பிறவிகளுக்கு வருமா?

அம்மா எனக்கு நீங்கள் எதையும் சொல்ல வேண்டா!

**எண்ணிப் பாருங்கள் அதுபோதும்!**

❖❖❖❖

அம்மா,

பெண் குழந்தைக்கு ஆண்சட்டை போட்டுப் போட்டுப் பார்க்கிறார்கள்.

ஆண் குழந்தைக்கு பெண்சட்டை போட்டுப் போட்டுப் பார்க்கிறார்கள்.

ஏன்?

பெண் குழந்தையே இல்லாமல் ஆண் குழந்தையே பெற்றவர்கள் பெண் குழந்தைக்கு ஆண்சட்டை போட்டுப் போட்டுப் பார்க்கிறார்கள்.

ஆண் குழந்தையே இல்லாமல் பெண் குழந்தையே பெற்றவர்கள் ஆண் குழந்தைக்குப் பெண்சட்டை போட்டுப் போட்டுப் பார்க்கிறார்கள்.

எது இல்லையோ அதன்மீது கொண்ட ஆர்வம் தான் இது.

ஏன்? ஆணும் குழந்தைதான்.

பெண்ணும் குழந்தைதான்.

என்னும் சமப்பார்வை இல்லாமை தானே காரணம்.

சமப்பார்வை நல்லது இல்லையா?

பெண்ணாகப் பிறந்தால் ஆண் ஒருவரை மணக்கப் போகிறார்.

ஆணாகப் பிறந்தால் பெண் ஒருவரை மணக்கப் போகிறார்.

ஒரு மருமகளோ ஒரு மருமகனோ வரத்தானே போகிறார்கள்?

அவர்களை ஒப்பப் பார்க்கும் பார்வை இல்லாமை தானே காரணம்!

இந்தக்குறை அம்மாமார்களிடம் தானே மிகுதியாகயுள்ளது.

அப்பாமார்களிடம் காணல் அரிதாக உள்ளதே.

பெண்ணின் பெருமையா அல்லது சிறுமையா?

**‘எண்ணிப் பார்த்துச் சொல்லுங்கள் அம்மா’**

❖❖❖❖

அம்மா,

சிலரை ‘உயிரே’ என்றும் ‘ஆருயிரே’ என்றும்,

பாராட்டுகிறார்கள்!

உயிர் என்பது மூச்சுக் காற்றுத் தானே!

ஆம்! மூச்சுக் காற்றுத்தான்!

மூக்கும் இருக்கிறது.

காற்றும் தாராளமாக இருக்கிறது!

ஆனால், உயிரில்லாமல் போகிறதே ஏன்?

காற்று உயிரில்லை!

மூக்கும் உயிரில்லை!

காற்று மூச்சு வழியே சென்று, ஈரற்பையில் உலாவி நஞ்சை அள்ளிக் கொண்டு அமுதத்தைத் தந்து குருதி வழியே ஓட வைப்பதாலேயே உயிராகிறது!

அது தடைப்பட்டால்

உயிரியக்கம் இல்லாமல் போகிறது.

ஆதலால், மூக்கு காற்று முதலியவை இருந்தாலும் அவற்றில் உயிரின் இயக்கம் வேண்டும். ஆதலால்,

உயிரின் சிறப்புப் புலப்படும்.

உயிரின் சிறப்புக் கருதியே **உயிரே, ஆருயிரே** என்கின்றனர்.

ஆருயிர் என்பது அரிய உயிர் என்பதாம்.

❖❖❖❖

அம்மா,

உயிரிருந்தாலும் இயங்கினாலும் சிலரை உயிருள்ளவராகக் கொள்ளாமல் உயிரற்ற பொ(ய்)ம்மையாகச் சொல்கிறாரே வள்ளுவர்! ஏன்?

புதுவீடு கட்டுகிறோம்! கம்புகளை உடல் கால் போல் கட்டி வைக்கோலைச் சுற்றி மேலே துணி போர்த்திக் கண் காது மூக்கு வாய் எல்லாம் வைக்கிறோம்!

அதற்கு உயிர் உண்டா?

உயிரில்லை. ஆனாலும் தொலைவில் இருந்து பார்ப்பவர்களுக்கு ஆள்போலத் தோன்றுகிறதல்லவா! அதற்கு உயிரா இருக்கிறது. கண்ணேறு பட்டுக் கேடாக்கும் என்னும் கண்மூடித் தனத்தால் உண்டாவது இது.

இதற்கு இயக்கம் இல்லை; உள்ளுறுப்பாம் மனம் இல்லை.

ஈவு இரக்கம் இல்லை; அறிவும் இல்லை. அதுபோல் அன்பு இல்லாப் பிறவி மாந்தப்பிறவி இல்லை. அப்பிறவி அன்பு அற்றதால், அருளோ அறமோ ஆக்கமோ செய்யா!

அன்பு செய்வதற்காகவே பிறந்தவர், அன்பின் இணைப்பால் பிறந்தவர் அன்பில்லாதவர் ஆனால், அவர் உயிரோடு இருப்பவர் ஆகார்! எலும்பும் தோலும் போர்த்த எலும்புக்கூடு போன்றவர் அவர். இதனை,

**“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**

**என்புதோல் போர்த்த உடம்பு”**

என்றார் வள்ளுவர்.

❖❖❖❖

அம்மா,

உங்கள் கூடப் பிறந்தவர் 'அம்மான்' எனப் படுகிறார்.

அப்பா கூடப் பிறந்தவர் 'அப்பாள்' எனப் படுவதில்லை. அத்தை எனப்படுகிறார் ஏன்?

அப்பாவுக்கு ஒருபெயர் அத்தன் என்பது.

அதனால், 'அத்தன்' உடன்பிறந்த பெண் அத்தை ஆனாள்.

எப்படி நம்முன்னோர் வழங்கினார்களோ அப்படி நாமும் வழங்கினால் தான் மொழி மரபு காக்கப்படும். மொழிச் சிதைவும் கேடும் அழிவும் ஏற்படமாட்டா. இவற்றைத் தேர்ந்து தெளிந்து தான் மொழி நலம் காக்க மாறாமல் மரபு போற்றினர்.

பார், பாட்டன் பாட்டி, பூட்டன் பூட்டிபோல்

தாத்தன் தாத்தி என வழங்கப்படவில்லை.

தந்தை தந்தி என வழங்கப்படவில்லை.

அப்பா அப்பி என வழங்கப்படவில்லை.

மனைவி மனைவன், இல்லாள் இல்லான்

இளவல் இளவன் இளவி என்பவை

வழங்கப்படவில்லை.

இவற்றை முன்னரே வழக்கில் கொண்டிருந்தால் நாமும் வழங்கிக் கொண்டிருப்போம்.

நாம் புதிதாக வழங்கினால், புதிராக இருக்குமே அல்லாமல், புரிந்ததாக ஆகாது.

புதிதான வாழ்க்கையும் மரபு நிலை மாறாமல் போற்ற வேண்டும் என்பதே முன்னோர் ஆணை!

❖ ❖ ❖ ❖

அம்மா,

புதியவர் ஒருவர் ஆணாக இருந்தால் மாமா என்று எனக்கு உறவு சொல்கிறார்கள்.

புதியவர் ஒருவர் பெண்ணாக இருந்தால் மாமி என்று எனக்கு உறவு சொல்கிறார்கள்.

ஏன்? வேறு உறவு சொல்வதில்லை?

மாமா என்றால் எனக்கு உடன்பிறந்தவர் போன்றவர்.

மாமி என்றால் அவர்க்கு மனைவி!

வருங்காலத்தில் அவர்களுக்குக் குழந்தைகள் இருந்தால் உங்களுக்குக் கணவன் மனைவி ஆகத்தக்கவர்!

எனக்கும் உடன்பிறப்பாகவும், அண்ணி கொழுந்தியாகவும் எண்ணி முறைவைத்து வாழத் தக்கவர்கள்.

இதனை உணர்ந்து வழிவழியாக நம் முன்னோர் காத்து வந்த பண்பாட்டுச் சிறப்பு இ∴தாம்!

வழியே போகின்றவர்களையும் தம் மக்களை விடுத்து முறைமை சொல்லி அழைத்து விரும்தோம்பிய பெருங்குணம் நம் பழைய இலக்கியங்களிலேயே பலவாக உண்டு.

இம்முறை தற்காப்பு பிறகாப்பு என்பவை எல்லாம் கொண்ட சிறப்பமைந்த தாகும்.

❖ ❖ ❖ ❖

அம்மா,

பாட்டன் என்பவரை பாட்டையா என்கின்றனர். சிலர் தாத்தா என்கின்றனர். ஏனம்மா?

அப்பாவுக்கு அப்பா பாட்டன் எனப்பட்டார்;

அம்மாவுக்கு அப்பா தாத்தா எனப்பட்டார்;

வரவர வேறுபாடு இல்லாமல் பாட்டனார், பாட்டையா, தாத்தா என்பவை வழக்கமாயின.

பாட்டுப்பாடக் கூடியவர், பாட்டுக் கற்பிக்கும் ஆசிரியர் பாட்டையா எனப்படல் உண்டு. அது முறைப்பெயர் இல்லை.

பாட்டையா என்னும், முறைப் பெயருடையவர், தாம் பிறந்த குடும்பத்துக்குக் காலம் தவறாமல் பாட்டம் பாட்டமாகப் பெய்யும் **பருவமழைபோல்** இருந்தவர் என்னும் பொருளதாம்.

தாத்தா என்பவர் **கொடையாளர்** என்னும் பொருள் கொண்டவர்.

தம்மகன், மகள் பிள்ளைகளை இணைத்துத் திருமணம் செய்து வைத்த கொடையாளராக அவர் இருந்ததால் தாத்தா என்றும், **தாதா** என்றும் கொடையாளர் என்னும் பொருளில் வழங்கப்பட்டார். பின்னர்ப் பொதுவகையில் தாதா என்பது கொடையாளர் என்னும் பொருளில் வந்தது.

"தாதா கோடிக் கொருவர்"

என்பது ஔவையார் தனிப்பாடல். தந்தையைப் பெற்றவர் பாட்டனார் அல்லது பாட்டையா!

தாயைப் பெற்றவர் தாத்தா என்பது வழக்கம்.

❖ ❖ ❖ ❖

அம்மா,

பாட்டியம்மா, பூட்டியம்மா என்று கூட நாம் சொல்கிறோம்.

ஆனால், பாட்டன் அப்பா பூட்டன் அப்பா என்பது இல்லையே. ஏன்?

பாட்டியாகிய அம்மா, பூட்டியாகிய அம்மா

என நம்முன்னோர் பொருள் கொண்டனர்.

ஆனால், பாட்டன் அப்பா, பூட்டன் அப்பா என்பவற்றை

பாட்டனாகிய அப்பா பூட்டனாகிய அப்பா,

என்னாமல்,

பாட்டனுக்கு அப்பா,

பூட்டனுக்கு அப்பா

என்று பழங்காலம் தொட்டே நம்முன்னோர் பொருள் கூறினர்.

அதனால், அவ்வழக்கம் மாறாமல் இருக்கிறது.

மரபு என்பது மாறாமல் தொடர்வது.

அது மாறினால் மொழியின் கட்டுக் குலைந்து போகும்!

❖ ❖ ❖ ❖

அம்மா,

எங்கள் பூட்டன் பூட்டி என்று சில பெரியவர்கள் சொல்கிறார்கள்.

அவர்கள் யார்?

பாட்டன் பாட்டியர்க்குத் தந்தை தாயாக இருந்தவர் பூட்டன் பூட்டியர் எனப் பட்டனர்.

வீட்டில் உள்ளவற்றைக் காக்கப் பூட்டி வைக்கிறோம். பெட்டியையும் பூட்டுப் போட்டுக் காக்கிறோம்.

பூட்டுச் செய்தலும் விற்றலும் வாங்கலும் பெருந்தொழிலாகவும் வணிகமாகவும் ஆய்விட்டன.

குளிர் மிகுந்தால் போர்வையினால் நாம் மூடிக் கொள்ளவில்லையா,

அழுக்கு, தூசி, பூச்சி போகாமல் இருக்க பானை, சட்டிகளை மூடி வைக்கிறோம்.

அதுபோல் நம்மை நோய், துயர், வறுமை, கறை, குறைபடாமல் பாதுகாத்தவர் -

பூட்டைப் போல் பாதுகாத்தவர் -

பூட்டன் பூட்டி எனப்பட்டனர்.

❖❖❖❖

அம்மா,

பூட்டன் பூட்டிக்கு மேல் உறவு இல்லையா?

பூட்டன் பூட்டிக்கு மேல் உறவு உண்டு.

அவர்கள் **ஓட்டன், ஓட்டியர்** எனப்பட்டனர்.

ஏனெனில் இப்படிப் போ, இப்படி வா, இவ்வாறு வாழவேண்டும் இவ்வாறெல்லாம் வாழ்க என வாழ்வியல் நடையைக் காட்டிப் பின்பற்றச் செய்தவர்கள் அவர்கள். அதனால் ஒட்டன் ஓட்டியர் எனப்பட்டனர்.

சிலர் ஓட்டன் ஓட்டியர்க்கு மேல் உறவு இல்லை என்று உரைத்தனர்.

ஆனால் அப்படி இல்லாமல் உறவு அதற்கு மேலும் உண்டு என்று கொண்டவர்கள் உண்டு.

அவர்கள் முன்னோர்கள் காலத்தில் சொல்லப்பட்டனர்.

பின்னர் அவ்வழக்கம் குறைந்து போனது.

❖❖❖❖

அம்மா,

காளிச் சிய்யான், பெரிய சிய்யான், சின்ன சிய்யான் என்று சிலர் அழைக்கிறார்களே! அந்தச் சிய்யான் என்பவர் யார்?

சிய்யான் என்பது பிழையான வழக்கு. ஓட்டனுக்கு முந்தியவர் அவர்.

**சேயோன்** என்னும் முறைப் பெயரே அப்படி வழங்குகிறது.

"பாட்டன் பூட்டன் ஓட்டன் என்றும்

பாட்டி பூட்டி ஓட்டி என்றும்

முறைப் பெயர்கள் உண்டு!

ஓட்டன் ஓட்டிக்குமேல் உறவில்லை என்பது பழமொழி என்று சொன்னேன் அல்லவா.

ஓட்டன் ஓட்டிக்கு முன்னே மிகமுன்னே இருந்தவன்

சேயோன்! **சேய்மை** என்பது **தொலைவு** என்பதன் குறியீடு.

அண்மை - பக்கம். சேய்மை - தொலைவு.

சேயோன் இணை, சேயோள் என வழங்கப்பட்டு மறைந்திருக்கலாம். அந்த இடத்தில் **பழையோள்** என்னும் பெயர் உண்டு. அதற்குத் தகப் பழையோன் என்னும் பெயரும் உண்டாயிற்று அப்பனுக்கு!

பழையோள் என்பது திருமுருகாற்றுப்படை.

பழையோன் என்பது திருவாசகம்.

சிய்யான் என்பது 'சேயோன்' என்பதன் வழூச்சொல்.

❖❖❖❖

அம்மா,

பரம்பரை, பரம்பரை என்கிறார்களே! அது என்ன அம்மா. பரன்பரை என்பதே பரம்பரை என வழங்கப்படுகிறது. பரன் என்றால் மிக அப்பாலான அல்லது மிகமுந்தி. முதல்வனாக இருந்தவனான அப்பன்.

பரை என்றால் மிக அப்பாலான அல்லது மிக முந்தி. முதல்வியாக இருந்தவளான அம்மை.

ஒரு மாமரம் இருந்தால் அதற்கு மூலமான மரமும் மிகப் பழமையிலே இருந்திருக்க வேண்டும் அல்லவா!

அப்படியே மக்கள் பிறவியாகிய ஆண் பெண்களுக்கு மூல முதலாக இருந்த அப்பனும் அம்மையும் பரன்பரை எனப்பட்டனர்.

அதன்பொருள் அறியாமல் பரம்பரை பரம்பரை என்கின்றனர்.

எல்லோருக்கும் ஒரு பரனும் ஒரு பரையுமே தாயாக இருந்தனர். ஒரு மாமரமே எல்லா மாமரங்களுக்கும் மூலமுதலாக இருந்தது போல்!

அம்மையும் அப்பனும் என்னும் பரன்பரையே, பெற்றுத் தந்தவளின் உரிமை நயம் கருதி அவளை முன் வைத்து 'அம்மை அப்பன்' எனக் கொண்டனர். ஆதலால் மாந்தர் அனைவரும் ஒரு தாய் தந்தை வழியாக வந்தவர்களே ஆவர். இதனைக் கொண்டே

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

என்றார் உலகநூல் தந்த திருவள்ளுவர்.

❖ ❖ ❖ ❖

அம்மா,

உங்கள் பிள்ளைகளை மக்கள் என்கிறீர்கள்;

மகன், மகள் என்றும் பால் வேறுபாடு காட்டியும் சொல்கிறீர்கள்.

மக்களுக்கும் மக்கள் உண்டு அல்லவா அவர்களுக்குப் பெயர் என்ன?

மக்களின் மக்களுக்குப் 'பேரர்' என்பது பொதுப்பெயர்.

பேரன் பேர்த்தி என்பது பால் பிரிப்புப்பெயர்.

அவர்களின் மக்கள் பெயர்,

கொள்ளுப்பேரன் கொள்ளுப் பேர்த்தி

என்பன

கொள்ளுப் பேரன் கொள்ளுப் பேர்த்தியின்

மக்கள் பெயர் எள்ளுப் பேரன் எள்ளுப் பேர்த்தி

என்பன

கொள்ளினும் சிறியது எள்ளு!

அப்பால் போகப் போகப் பொருளின் தோற்றம் சிறிதாதல் இயற்கை அல்லவா!

அதனால் அப்பெயர் இட்டனர்.

இவையெல்லாம் நம் முறைப் பெயர்கள்.

முறை என்பதன் ஒழுங்குமுறை வீட்டில் இருந்து 'முறைமை' என்பது ஆட்சிமுறை, நீதிமுறை, ஒழுக்கமுறை என ஏற்பட்டன.

❖❖❖❖

அம்மா,

நாம் அம்மா அப்பா என்கிறோம்.

பாட்டன் பாட்டி, பூட்டன் பூட்டி

ஓட்டன் ஓட்டி, சேயோன் பழையோன்,

பரன் (அப்பன்), பரை (அம்மை) என்கிறோம்.

ஆங்கிலேயர்க்கு அப்படி இல்லையா?

உண்டு! ஆனால் அவர்களுக்குத் தனித்தனிச் சொல் இல்லை.

நம்மொழி பழமையான மொழி; அவர்கள் மொழி புதியது.

நம்மவர்கள் முன்னோர்களைப் போற்றுவது கடன் எனக் கொண்ட பண்பாட்டினர்.

அவர்கள் நம்மைப் போல் அப்படி முதியவர்களைப் போற்றுவதைப் பண்பாடாகக் கொள்ளவில்லை.

இப்பொழுது அவர்களும் உணரத் தொடங்கி உள்ளார்கள்.

பெற்றோர் பிள்ளைகளை இளமையில் பேணுவது போல் வளர்பவரும் வளர்த்தவரும் பெற்றோரைப் போற்றுதல் கட்டாயக் கடமையாம்.

அது மாந்தர் என்பதற்குரிய ஒப்பற்ற அடையாளமாம்.

❖ ❖ ❖ ❖

அம்மா,

நீங்கள் என்னைப் பெற்றவர்கள்.

நீங்களும் அம்மா, நானும் அம்மா!

நமக்கு வயது வேறுபாடு இல்லையா?

வயது வேறுபாடு உண்டு. அதனால் தான்

உன்னை வா அம்மா என்கிறார்கள்.

என்னை வாங்க அம்மா என்கிறார்கள்.

வா, வாங்க என்பவை வயது வேறுபாடு காட்டுவன என்கிறீர்கள்.

ஆம். தம்பி அண்ணனையும் வாப்பா என்கிறோம்.

அப்பாவை வாங்கப்பா என்கிறோம்.

ஆனால், சிறுவர் பெரியர் வேறுபாடு அல்லாமல் ஆங்கிலேயர் எல்லாரையும் நீ! (யு) என்கிறார்களே!

ஆம் அவர்கள் வழக்கம் அது. ஆளுக்குத் தக்கபடி பொருள் பார்த்துக் கொள்ளவேண்டும் அது அவர்கள் பண்பாடு.

❖❖❖❖

அம்மா,

மான் என ஒரு விலங்கு உள்ளது. ஆனால் சிலர் 'மான்' என்பதைப் பின்னே கொண்டு பெருமான், மருமான் என வழங்கப்படுகின்றனர். அவர்களும் மான்களா?

மான் என்பது '**மகன்**' என்னும் பொருளது.

பெருமகன் பெருமான் எனப்பட்டான்.

மருமகன் மருமான் எனப்பட்டான்.

திருமகன் திருமான் எனப்பட்டான்.

மகன் என்பது 'மான்' ஆனது போல்,

மகள் என்பது 'மாள்' ஆயதா?

ஆகவில்லையே.

பெருமகள் என்பதே பெருமாள் எனப்பட்டது.

பெண் பெருமாள் என்றே ஒருபுலவர் விளங்கினார்.

பெருமாள் பெண்மகளாக இருந்து ஆணுக்கும்

ஆயதே பெருமாள் என்னும் ஆண்பாற்பெயர்.

ஆனால், 'பெரும் ஆள்' பெருமாள் ஆகவும் இடமுண்டு.

பெருமாள் என்பதைப் பெருமகள் என்னும் பொருளில்,

"அரியலால் தேவியில்லை. ஐயன் ஐயாற னார்க்கே" என்றார் திருநாவுக்கரசர்.

❖ ❖ ❖ ❖

அம்மா,

கோழியும் குஞ்சும் தாய் பிள்ளைகள்.

பசுவும் கன்றும் தாய் பிள்ளைகள்.

அவற்றுக்கும் தாய் தந்தை உண்டு.

ஆனால் அவை முறை வைத்துக் கொள்வது தெரியவில்லையே!

ஆம்! அவற்றுக்கு நம்மைப் போல் மனஅறிவாம் ஆறாம் அறிவு இல்லை. ஆதலால் அவற்றுக்குப் பெற்று வளர்த்தாலும் வளர்ந்த பின் முறை வைத்துக் கொள்ள முடியவில்லை.

வளர்ந்து வரும்போது தான் தாய்க்கும் பிள்ளைக்கும் பாசமும், அன்பும்.

வளர்ந்துவிட்டால் கூட்டாக இருக்கும்; பிரிந்தும் பொகும்.

ஆனால், நாம் பிரிந்து போனாலும் இறந்து போனாலும் முறை போகாமல் இருப்பது ஆறாம் அறிவால் தான்.

மரங்களில் இருந்து தான் மரபு என்னும் பெயர் வந்தது. ஆனாலும் அவை தாய் பிள்ளை தந்தை என்பவை அறியா. ஏனெனில் உயிர் வாழும் எனினும், ஓரறிவே அதற்கு உண்டு.

தண்ணீர் விட்டு உரம் போட்டால் வளரும் அவ்வளவே. அவற்றின் நிலை அவற்றின் உற்றறிவு என்றும் தொடுதல் அறிவு என்றும் வழங்கும்.

❖❖❖❖

அம்மா,

குழந்தைகளைத் தாலாட்டும் போது,

“ஆராரோ ஆரிவரோ

ஆராரோ ஆராரோ”

என்கிறீர்கள். அது என்ன வெறும் ஓசைதானா? அல்லது ஒலிதானா? பொருள் உண்டா?

பொருளில்லாத ஒலி சொல் தமிழில் எதுவும் இல்லை!

“ஆர் ஆரோ, ஆர் இவரோ, ஆர் ஆராரோ”

என்று தாய் தம் குழந்தை வருங்காலத்தில் எப்படியெல்லாம் வரவேண்டும் என்னும் ஆர்வத்தை வெளிப்படுத்திக் காட்டுவதே அவை ஆகும்.

குழந்தையாக உள்ள நீ வருங்காலத்தில்,

ஔவையாரா, காக்கை பாடினியா,

கோப்பெருந் தேவியா, ஆண்டாளா,

கண்ணகியா, மணிமேகலையா என்றும்

தொல்காப்பியரா, வள்ளுவரா,

கபிலரா, பரணரா,

கரிகாலனா, செங்குட்டுவனா,

வள்ளலாரா, மறைமலையாரா

என்றும் வினாவும் அவையாம் வெற்று ஒலி இல்லை!

வெற்றி ஒலி அது!

❖ ❖ ❖ ❖

அம்மா,

‘ஒப்பாரி’, ‘ஒப்பாரி’ என்கின்றனர்.

ஒருவர் இறந்தால் ஊரவர் கூடி அழுது ஒப்பாரி பாடுகின்றனர்.

ஒப்பாரி என்பதன் பொருளென்ன?

பிறந்து வளரும் குழந்தையை யார் யாரோ என்று கேட்டு மகிழ்ந்தனர்.

அப்படிப்பட்ட குழந்தை வளர்ந்து ஆளாகி, பெற்று பெருகி பேரும் புகழும் பெற்று, பெறவேண்டும் திறங்களும் நலங்களும் பெற்றுக் கடைசிக் காலத்தில் உலகியற்கைப்படி, இயற்கை எய்துகின்றது.

அந்நிலையில், **ஆராரோ** பாடப்பட்ட பிள்ளை அப்படிப் போலவே சிறந்து வாழ்ந்து,

ஒப்பார் இவர்க்கு எவரும் இல்லை என்னுமாறு இயற்கை எய்தினார் என்பதற்குச் சான்று வழங்குவது போன்றதே **ஒப்பாரி**!

‘ஆராரோ’ - பிறந்த நாள் ஆர்வப் பெருக்கு!

‘ஒப்பாரி’ நிறைந்த நாள் நற்சான்று!

வாழ்நாள் தொடக்கம் முன்னது!

வாழ்நாள் நிறைவு பின்னது!

**வாழ்வின் அளவுகோல்கள் இவை!**

❖❖❖❖

அம்மா,

நீ ஆகாட்டு என்கிறீர்கள்
நான் ஓடினேன்;
நீங்களும் ஓடி வந்தீர்கள்;
நிற்பது போல் நின்றேன்;
மீண்டும் ஓடினேன்.
ஓடிவந்து கையைப் பிடித்தீர்கள்!
ஆகாட்டு என்றீர்கள்!
ஆ என்றேன்;
ஊட்டினீர்கள்!
உண்டேன்;
முத்தம் கொடுத்தீர்கள்!

❖ ❖ ❖ ❖

அம்மா,

உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்
ஆ காட்டுங்கள்!
ஓட வேண்டா!
ஒளிய வேண்டா!
ஆமட்டும் காட்டுங்கள்!
அம்மா, ஆமட்டும் காட்டுங்கள்!
ஆயிரம் ஆயிரம் முறைகள் ஆகாட்டச் சொல்ல
ஏமாற்றி ஏமாற்றி ஆகாட்டினேன்!

அம்மா என்னை ஏமாற்றாமல் ஒருமுறை - ஓரே - ஒருமுறை 'ஆ' காட்டுங்கள்!

பிறகு கேட்க மாட்டேன்!

கெஞ்ச மாட்டேன்!

செத்துக் கொண்டிருந்த அம்மா,

'ஆ' என்றார்!

'ஆம்' கடைசியாக 'ஆ' என்றார்!

ஊட்டினாள்! மூடினார்!

வாயை மட்டுமன்று!

கண்களையும் தாம்!

உறவெல்லாம் 'ஆ' என்றன!

இனி, அம்மா யாரையும்

ஆ காட்டச் சொல்ல மாட்டார்.

அவரையும் யாரும்

ஆ காட்டச் சொல்ல மாட்டார்.

**இந்த 'ஆச்சு போச்சு' தான் வாழ்வா?**

அன்பு, அருள், அடக்கம், அறம் இருந்தால் என்றும் சாவா வாழ்வு வாழலாமே! அப்படி உலகத்தார் நெஞ்சங்களிலெல்லாம் வாழும் பெருமக்கள் இலரா!

அந்த மேன்மையை அடைவதற்காகத் தானே உடலை 'மெய்' என்றும், 'மேனி' என்றும் இறந்தவரை மாண்டார் என்றும் கூறுகின்றார். இவற்றை உணர்ந்து வாழ்ந்தால் அவர் சாவா வாழ்வர் தாம்!

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

❖ ❖ ❖ ❖

குறிப்புக்காக



(இடமிருந்து) திருவாட்டி இலட்சுமி

கு. தாமோதரன்

திருவாட்டி பா. உஷா

The Printing House, Try-23. Ph : 2420121